*2020 செப்டம்பர் 16]* *[திரு. ஓ. பன்னீர்செல்வம்]*

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| *50* | *ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்* | *1* | – | – |
| *51* | *இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு* | *4,227,03,00* | – | – |
| *52* | *மாற்றுத் திறனாளிகள் நலத் துறை* | – | *2,26,06* | – |
| *54* | *வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)* | *2* | *2* | *56,67,00* |
| *பெருமொத்தம்* | | *11,642,24,01* | *842,34,04* | *332,47,86* |

## 7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2020-2021, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article *205*, read with Clause *(3)* of Article *203*, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving, in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year *2020–2021*."

## 11. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2020–2021, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 செப்டம்பர் 16

“2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 16–9–2020 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## நிறைவேற்றப்பெற்ற 2020–2021 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | – | – | 38,90 |
| 3 | நீதி நிருவாகம் | 2 | – | – |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 11 | 12,01,05 | – |
| 5 | வேளாண்மைத் துறை | 34,96,86 | 11,00,10 | – |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 82,59,82 | 1 | – |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 1 | – | – |

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| *8* | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | *4,92,75* | – | – |
| *9* | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | *9* | *7,27,65* | – |
| *10* | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | *1* | – | – |
| *11* | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | *1* | – | – |
| *12* | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | *1* | – | – |
| *13* | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | *3,400,91,82* | – | *103,25,00* |
| *14* | எரிசக்தித் துறை | *101,41,78* | *437,00,00* | – |
| *16* | நிதித் துறை | *5,00,06* | – | – |
| *17* | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | *1* | – | – |
| *19* | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | *1,109,62,09* | – | – |
| *20* | உயர் கல்வித் துறை | *190,95,03* | *12,00,00* | *1,76,46* |

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 1 | 16 | – |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 6 | – | – |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 32,20,13 | – | – |
| 27 | தொழில் துறை | 7,50,00 | – | 170,28,00 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 1,51,46 | 67,88,60 | – |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 1 | – | – |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 21 | 2,00,00 | – |
| 33 | சட்டத் துறை | 1 | – | – |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 1,005,30,78 | 15,16,00 | – |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 1 | – | – |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 2 | – | – |

2020 செப்டம்பர் 16]

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 38 | பொதுத் துறை | 6,74,89 | – | – |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 3 | 192,59,06 | – |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 11 | 1,00,33 | – |
| 41 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 213,83,08 | – | 12,50 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 1,110,55,34 | – | – |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 5 | – | – |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 100,00,00 | – | – |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 99,30 | – | – |
| 48 | போக்குவரத்துத் துறை | – | 82,15,00 | – |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 6,15,00 | – | – |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 1 | – | – |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 4,227,03,00 | – | – |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | – | 2,26,06 | – |

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2 | 2 | 56,67,00 |
| பெருமொத்தம் | | 11,642,24,01 | 842,34,04 | 332,47,86 |

## 5. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (உ) மன்னார்குடி தொகுதி, தலையாமங்கலம் ஊராட்சி, பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தில் முறைகேடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர், சமூக நீதிக் காவலர், தலைவர் கலைஞர் அவர்களால் உயரிய சிந்தனையோடு 1970 ஆம் ஆண்டு முதன்முதலில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் துவங்கப்பட்டது. பின்பு அத்திட்டம் IAY ஆக இருந்து இப்போது PMGAY–வாக மாறியிருக்கிறது. மாறியிருக்கும் இந்தத் திட்டம் சமீப காலமாகப் பாதை மாறிச் செல்கிறதோ என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தலையாமங்கலம் ஊராட்சியில் பல்வேறு முறைகேடுகள் இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. குறிப்பாக, 143 வீடுகள் அங்கே வழங்கப்பட்டிருந்தாலும், அங்கு வெறும் 10 வீடுகள் மட்டும்தான் கட்டப்பட்டிருப்பதாகத் தற்போதைய ஆய்வில் தெரிந்திருக்கிறது. மீதமுள்ள வீடுகளையே அங்கு காணவில்லை. அதேபோல், 504 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன என்று கணக்குகள் கூறியிருந்தாலும், 400–க்கும் மேற்பட்ட கழிவறைகள் அங்கு ஒட்டுமொத்தமாகக் காணவில்லை. மிகப் பெரிய குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதோ என்று எங்கள் தலைவர், தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர், வெகு விரைவில்